செய்தி வெளியீடு எண்:111 நாள்:12.02.2021

## செய்தி வெளியீடு

தமிழக அரசின் முதன்மை பயிற்சி நிலையமான அண்ணா மேலாண்மை நிலையம் கடந்த 40 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தில் அகில இந்தியப் பணி அலுவலர்கள் முதல் அமைச்சுப் பணியாளர்கள் வரை அனைத்து அலுவலர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த மையத்தில், அலுவலக நடைமுறை, ஒழுங்கு நடவடிக்கைகள், வழக்கு மேலாண்மை, ஓய்வூதியத்திற்கு முந்தைய ஆலோசனை, தகவல் பெறும் உரிமைச் சட்டம் போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. கால மாற்றத்திற்கேற்ப பயிற்சியின் தன்மையை விரிவு படுத்தும் நோக்கிலும், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமட்டும் அல்லாமல் தமிழ் பேசும் இடமெல்லாம் பயிற்சியின் பலன்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும் அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென முதன்முறையாக ஒரு புதிய ‘‘காட்சி ஊடகப் பாதை’’ (You Tube Channel) 11.02.2021 அன்று துவக்கப்பட்டது.

3, அண்ணா மேலாண்மை நிலையத்தால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் நேரடியாக கலந்து கொள்ளும் பயிற்சியாளர்கள் பயிற்சியின் முழு பலன்களை பெறுகின்றனர். நேரில் வர இயலாதவர்கள் தமிழகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் இந்தக் காட்சி ஊடகத்தின் மூலம் அளிக்கப்படும் தகவல்களைப் பெற்றுப் பயனடைய இயலும். இந்த ஊடகத்தின் மூலம் சின்னச் சின்ன செய்திகள் தகவல்களாக அளிக்கப்படும். அலுவலக நடைமுறை, ஒழுங்கு நடவடிக்கைகள், வழக்கு மேலாண்மை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி, நேர மேலாண்மை, மன அழுத்த மேலாண்மை எனும் பல்வேறு பொருண்மைகள் குறித்து சிறந்த வல்லுநர்கள் மூலம் தகவல்கள் அளிக்கப்படும். இத்தகவல்கள் குறித்தோ, அரசுப் பணியாளர்களால் கையாளப்படும் கோப்புகளில் எழும் சந்தேகங்கள் குறித்தோ அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு குறுஞ்செய்திகள் அனுப்பினால் அது குறித்த விளக்கங்களும் இந்த காட்சி ஊடகப் பாதையில் அளிக்கப்படும். இதன்மூலம் அரசு அலுவலர்கள் செம்மையான நிருவாகத்தை மக்களுக்கு வழங்கிட இயலும். மகத்தான மனித வளத்தின்மூலம் மக்கள் நலம் பேணும் வகையில் சிறப்பாகப் பணிபுரிந்திட இயலும்.

எனவே, இந்த காட்சி ஊடகப் பாதையை அரசுப் பணியாளர்கள் மட்டும் அல்லாது அனைவரும் கண்டு பயனடைய வேண்டுகிறோம்.

கூடுதல் தலைமைச் செயலாளர் / இயக்குநர்,

அண்ணா மேலாண்மை நிலையம் (ம)

பயிற்சித் துறைத் தலைவர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**